2020 மார்ச் 16] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியபோது மிருகத்தனமாக நடந்துகொண்டார்கள் என்று சொன்னார். காவல் துறையினருக்கும், அவர்களுக்கும் எந்த ஒரு கருத்து வேறுபாடும், எந்த ஒரு பிரச்சினையும் இல்லை. நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, போக்குவரத்து நெரிசல்மிக்க சாலையாக அது இருக்கின்ற காரணத்தினால், அங்கு பேரணிக்கு அனுமதி கொடுக்க மறுத்திருக்கின்றார்கள். அவர்கள் ஒத்துழைப்பு நல்கியிருந்தால், இந்தப் பிரச்சினை ஏற்பட்டிருக்காது. எனவே, காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல் தடியடி எதுவும் போலீசாரால் நடத்தப்படவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

(அ) குடியுரிமைத் திருத்தச் சட்டம் தொடர்பாக தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் 14–3–2020 அன்று நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் குறித்து—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள், என்ன, சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. ஜே.ஜி. பிரின்ஸ், உட்காருங்கள், அவ்வளவுதான். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொன்னதற்குப் பிறகு அதில் கேள்வி எதுவுமில்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) நாளைக்குப் பார்க்கலாம். (குறுக்கீடு) என்ன, திரு. முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைமைச் செயலாளர் அவர்கள் கூட்டிய கூட்டத்தில் நானும் பங்கேற்றேன். எனக்கு ஒரு வாய்ப்பு தருவீர்கள் என்று நினைத்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் முடிந்துவிட்டது. உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) zero hour முடிந்துவிட்டது.

(இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள் அவையிலிருந்து வெளியேறினார்.)